[1993 பிப்ரவரி 8]

12—

மாநகராட்சி துப்புரவுத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம்.

*14673—திரு. செ. கு. தமிழரசன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநகராட்சிகளிலுள்ள துப்புரவுத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது நிறைவேற்றப்படும் ?

(இ) நகராட்சிகளுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : மாநகராட்சிகளில் உள்ள துப்புரவுப் பணியாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் ஒரு நல்ல திட்டம் செயல்படுத்தப்பட வேண்டுமென்று தமிழகத்தின் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உத்திரவிட்டுள்ளார்கள். இதற்கான கருத்துருக்களை உருவாக்கி அரசுக்கு அனுப்பும்படி சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன. அந்தக் கருத்துருக்கள் பரிசீலிக்கப்பட்டுத் தேவையான உத்திரவுகள் விரைவில் வழங்கப்படும்.

(இ) இந்தத் திட்டம் படிப்படியாக நகராட்சிகளுக்கும் விரிவாக்கப்படுவது குறித்தும் அரசு பரிசீலிக்கும்.

திரு. செ. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட துப்புரவுத் தொழிலாளர்கள் இருந்துகொண்டு இருக்கிறார்கள். குறிப்பாக, நூற்றுக்கு நூறு சதவீதம் ஒரே சமுதாயத்தைச் சார்ந்தவர்கள்தான் அந்தத் தொழிலிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஊரையே தூய்மைப்படுத்துகிற அவர்களுக்குத் தங்குவதற்கு இடம் இல்லாமல் ஒதுக்குப்புறங்களிலே தங்குகிற நிலைமை, அவல நிலைமை இருந்துகொண்டு இருக்கிறது. துப்புரவுத் தொழிலாளர்கள் நகர்ப்புறங்களிலே வீடு கேட்டால் அவர்களுக்கு வாடகைக்குக்கூட வீடு கிடைப்பதில்லை. எனவே இந்த அவல நிலமையைப் போக்கிட அரசு முன் வந்திருப்பது பாராட்டிற்குரியது. ‘ ஏழையின் சிரிப்பிலே இறைவனைக்

காண்போம்' என்றார் பேரறிஞர் அண்ணா. 'நலிந்த மக்களின் முன்னேற்றமே நாட்டின் முன்னேற்றம்' என்றார் அண்ணல் அம்பேத்கார். 'உழைப்பவரே உயர்ந்தவர்' என்று சொன்னார் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஏழைகளின் உயர்வே எனது உயிர் மூச்சு' என்கிற வகையிலே இன்றைக்கு உழைத்துக்கொண்டிருக்கிற தமிழக முதல்வர், புரட்சித் தலைவி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சிறப்பான திட்டத்தை அறிமுகப்படுத்தியிருப்பதை வரவேற்கிறேன். எவ்வளவுவிரைவிலே இதைத் தொடங்க முடியும் என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் உத்தரவின்படி, இன்று இந்தியாவில், ஏனைய மாநிலங்களுக்கு முன் உதாரணமாக, ஏழையெளிய மக்களின் முன்னேற்றத்திற்காக புதிய புதிய திட்டங்கள் அறிவிக்கப்பட்டு நிறைவேற்றப்படுகின்றன. அந்தத் திட்டங்களில் துப்புரவுப் பணியாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டமும் ஒன்று. தெருக்களைச் சுத்தமாகப் பராமரிக்கும் துப்புரவுப் பணியாளர்களின் பணி மிகவும் முக்கியமான ஒன்று. இவர்கள் தற்போது பல்வேறு இடங்களிலிருந்து அதிகாலையில் பணிக்கு வருவது சிரமமாக இருக்கிறது. எனவே அவர்களுக்கு ஒரு நல்ல இடத்தைத் தேர்வு செய்து அங்கே அவர்களுக்கு வீடு கட்டிக்கொடுக்கும் திட்டத்தை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். மிக விரைவிலே இந்தத் திட்டத்தை நிறைவேற்ற இருக்கிறோம் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப் புறங்களிலே இன்னமும் கூட மனிதன் மலத்தை மனிதனே தலையில் தூக்குகிற கொடுமை இந்த இருபதாம் நூற்றாண்டிலும் நடைபெற்று வருவதை நாம் அறிவோம். எனவே, முழுக்க முழுக்க ஃபிளஷ்-அவுட் லெட்ரின் என்று சொல்லப்படுகிற உலர் கழிவறைகளைக் கட்டித் தருவதற்கும் ஈரமான அந்தக் கழிவறைகளை அகற்றுவதற்கும் சட்டத் திருத்தம் செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது தமிழக அரசின் சார்பில் பல்வேறு நகராட்சிகளுக்கு இதுபோன்ற திட்டங்களை நிறைவேற்றி வருகிறோம். மிக விரைவில், இவை கிராமப்புறங்களிலும் விரிவுபடுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1993 பிப்ரவரி 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ச. ஆரோக்கிய சாமி.

டாக்டர் ச ஆரோக்கியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சிகளில் பணியாற்றுகிற துப்புரவுத் தொழிலாளர்களுக்கு வீடுக் கட்டிக் கொடுக்கும் அந்தத் திட்டம் உடனடியாக நிறைவேற்றப்படாவிட்டாலும், அந்த நகராட்சி களுக்குச் சொந்தமான இடங்களில், அவர்களுக்கு இடமாவது கொடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு தமிழக அரசின் சார்பிலே திட்டங்கள் தயாரிக்கப் பட்டு, நிறைவேற்ற இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி தனியாக இடங்களை ஒதுக்கிக் கொடுத் தால், அதன் செலவை ஏற்று கட்டிக் கொள்வதற்கு அவர்களிடத் திலே பொருளாதார நிலைமை இல்லாத காரணத்தினால், அரசே முன்வந்து அவர்களுக்கு வீடு கட்டிக்கொடுக்கும் திட்டத் தைத்தயாரித்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசாங்கம் வீடு கட்டவே தயாராக இருக்கிறது என்கிறபோது, உறுப்பினர், இடமாவது கொடுங்கள் என்பதாகக் கேள்வி கேட்டுக் கொண் டிருக்கிறார்கள்.

அடுத்து வினா எண் 13 டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை, மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர்.

13—

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள மீனவர்களுக்கு உணவு அட்டை மூலம் மண்ணெண்ணெய் வழங்கல்.

*9141—டாக்டர் மு. அம்மமுத்துப்பிள்ளை : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

கன்னியாகுமரி மாவட்டத்தில் 1700 மீனவர்கள் மண்ணெண்ணெயினால் இயங்கும் கட்டுமர வெளிப்பொருத்து இயந்திரம் (Out Board Motor) பொருத்துவதால் உரிய நேரத்தில் மண்ணெண்ணெய் கிடைக்காமல் தொழில் பாதிக்கப்பட்டுள்ளதால் இவர்களுக்கு உணவு அட்டை மூலம் ரேஷன் கடையில் மண்ணெண்ணெய் வழங்க அரசு ஆவன செய்யுமா ?